**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 2/2010**

Prosecution witness: **58**

| | | | |
|---|---|---|---|
| Name: | சேகுமுகைதீன் | Caste: | |
| Father'sName: | முகம்மது இஸ்மாயில் | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A1,A11, A15 present. Others absent. Petition U/s 317 filed and allowed.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 13.06.2023**

**முதல் விசாரணை**:

நான் தென்காசி மாவட்டம் எஸ்.கே.பி தெருவில் குடியிருந்து வருகிறேன். தென்காசி , கூலக்கடை பஜார் தெருவில் எஸ்.கே.எம் என்ற பெயரில் இரும்பு மற்றும் பெயிண்ட் கடை வைத்துள்ளேன். தினசரி காலை 9.00 முதல் 10.00 மணிக்கு கடையை திறந்து இரவு 10.00 மணிக்கு கடையை அடைப்பேன். தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக்கழகம் என்ற அமைப்பு உள்ளது. மேற்படி அமைப்பிற்கும் வேறு சிலருக்கும் ஏதேனும் பிரச்சனை உள்ளதா இல்லையா என்று எனக்கு தெரியாது. இந்து முஸ்லீம் பிரச்சனை சுமார் 16 வருடங்களுக்கு முன்னர் ஒரு முறை எங்கள் பகுதியில் நடைபெற்றது. வழக்கம்போல் நாங்கள் கடையை திறந்துகொண்டிருந்தபோது எங்கள் கடை அருகில் பிரச்சனை ஏற்பட்டு எல்லோரும் கடையை அடையுங்கள் என்று சபதம் போட்டார்கள். நான் அவசரமாக கடையை அடைத்து விட்டு என் தந்தையை அழைத்துக்கொண்டு சென்றுவிட்டேன். அங்கு கூட்டமாக இருந்தார்கள். அங்கு யாருக்கு காயம் ஏற்பட்டதா என்று

நான் பார்க்கவில்லை. நான் வேறு வழியாக என் தந்தையை அழைத்து கொண்டு சென்றுவிட்டேன். சுமார் 5 நாட்கள் கழித்து கடையை திறந்தோம். மறுநாள் செய்திதாள் மற்றும் டி.வியிலும் இரண்டு தரப்பினருக்கும் பிரச்சனை ஏற்பட்டு அந்த இடத்தில் 6 நபர்கள் இறந்துபோனதாக கேள்விப்பட்டேன். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கடையை திறந்து பொருட்களை எடுத்து வைக்கும்போது சம்பவம் என்று கேள்விப்பட்டேன். எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. எதிரிகளை தெரியாது. அந்த கடை என் தந்தைக்கு சொந்தமானதாகும். நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றும் அந்த கடை என் தந்தைக்கு சொந்தமானது என்பதால் அந்த நாளில் அங்கு இருந்தேன் என்பதும் கடையை அடைத்தேன் என்பதும் பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றால் சரியல்ல.